சுற்றறிக்கை இல:- 06 / 2008

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம் / மன்னார் / வவுனியா

# கூட்டுறவு நிதி அறவீடு

தங்கள் பிரிவிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களால் செலுத்தப்பட வேண்டிய கூட்டுறவுநிதி பெருந்தொகையில் வருமதியாக உள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைப் பொறுத்தளவில் கூட்டுறவுநிதி அறவீடும் செயற்பாடு மாவட்ட கூட்டுறவுச் சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் குறிப்பிட்ட சபைகளால் அறவிடப்படும் கூட்டுறவுநிதி திருப்திகரமானதாக காணப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் இருந்து கூட்டுறவுநிதி முற்றாகச் செலுத்தப்படாமல் உள்ளது.

எதிர்வரும் 2009ம் ஆண்டிலிருந்து சகல கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் வருமதியாக உள்ள கூட்டுறவுநிதி மாதாந்தம் பகுதிபகுதியாக அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இச் செயற்பாட்டிற்கு பொறுப்பாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செயற்படுதல் வேண்டும்.

இதற்காக யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட கூட்டுறவுச் சபைகளுடன் இணைந்து ஒரு வேலைத்திட்டத்தினை தயாரிப்பதுடன், அவ் வேலைத்திட்டத்திற்கமைய செயற்படுதலைக் கண்காணிப்பதும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும். இவ் வேலைத்திட்டம் எனது அனுமதிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாதாந்தம் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் சகல கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் கூட்டுறவுநிதி அறவீடு செய்யப்படுதலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கான வேலைத்திட்டம் ஒன்றினை தயாரித்து எனது அனுமதிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் இவ் வேலைத்திட்டத்துக்கமைய கூட்டுறவுநிதி அறவீடு செய்யப்படுதலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கண்காணிப்பதுடன் மாதாந்தம் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்திறன் மதிப்பீடு கூட்டுறவுநிதி அறவீடு கவனத்திற்கொள்ளப்பட்டே அனுமதிக்கப்படும் என்பதை உரிய உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும்

ஆ. சுப்பிரமணியசர்மா
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.
வடமாகாணம்.

பிரதி :- செயலாளர், மாவட்ட கூட்டுறவுச்சபை, யாழ்ப்பாணம் / வவுனியா
தகவலுக்காகவும் கூட்டுறவுநிதி அறவீடு தொடர்பான வேலைத்திட்டம் தயாரிப்பதற்கும், ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும்.